Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
இன்பம் தரும் 33 / 303 / 3003 பத்திகளை
உபயோகியுங்கள்.
தயாரிப்பாளர்கள்:
S. V. முருகேசன் அன் சன்ஸ்
பெங்களூர்–2.

போன்: 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம், சார்வரி பங்குனி 21 அமநாள் ஷவ்வால் 15 (3-4-61) திங்கட்கிழமை இதழ் 44

# ரயில்வேயிலும் மறியல்

## "கரங்களுக்கு விலங்கு கண்களுக்கு சுதந்திரம்"

### தமிழர் நிலைபற்றி பட்டிருப்பு எம். பி.

மட்டக்களப்பு, சனி

"உங்கள் கரங்கள் விலங்கிடப்பட்டிருந்த போதிலும் கண்களும், உடம்பும் சுதந்திரமாகத்தானே இருக்கின்றதென்று கூறுவதுபோல் இருக்கிறது திரு. வீரசூரியாவின் வாதம்".

இவ்வாறு பட்டிருப்பு எம். பி.யும் தமிழரசுக் கட்சித் தலைவருமான திரு. இராசமாணிக்கம், நமது நிருபரிடம் கூறினார். தமிழர்களுக்கு போதிய உரிமைகள் வழங்கப்பட்டிருப்பதாக திரு. வீரசூரியா என்பவர் ஆங்கிலப் பத்திரிகையொன்றில் கட்டுரையொன்றை வரைந்திருந்தார். அந்தக் கட்டுரைக்குப் பதிலிறுக்கும் வகையில் திரு. இராசமாணிக்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:– திரு. வீரசூரியா தமது சிறந்த வாதத் திறமையால் தமிழ் பேசும் மக்களின் அடிப்படை உரிமைகளை புறக்கணித்து சிறிய சலுகைகளையிட்டுப் பெரிதாகப் பேசி உண்மையை மறைக்க முயல்கிறார்.

"சுதந்திரம் பெற்றபின் தமிழ் பேசுமக்கள் பாராளுமன்றத்திலுள் பெரும்பான்மை பலத்திலும், வெளியே காடையர்களாலும் ஆளப்படுகிறார்கள். இந்த நிலை மாறி பொருளாதாரத்திலும் அரசியலிலும் சமத்துவம் எங்களுக்கு வழங்க வேண்டுமென்பதே எங்கள் கோரிக்கை. அதற்கானவகையில் ஜனநாயக அமைப்பு அமைய வேண்டும்.

"தனிச் சிங்களச் சட்டம், கோட்டு மொழிச் சட்டம் போன்ற பிரிவினைச் சட்டங்கள் தமிழ் பேசுமக்களின் பிரதிநிதிகளின் விருப்பமின்றி இயற்றப்பட்டவையென்பதை திரு. வீரசூரியாவிற்கு ஞாபகமூட்டுவதுடன் தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையோர் இயற்றும் சட்டத்தையேற்று வாழவேண்டுமென விரும்புகிறாரா? எனக் கேட்க விரும்புகிறேன்.

புதிதாகச் சுதந்திரம் பெற்ற நாடுகளைப்போல இலங்கை தனக்கென ஒரு அரசியல் திட்டத்தை வகுத்துக் கொள்ளாமையால் சிறுபான்மையினருடைய உரிமைகளைப் பாதுகாக்க வழியில்லாமல் போய் விட்டது.

திரு. வீரசூரியா குறிப்பிடும் பல சட்டங்கள் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இயற்றப்பட்டவை என்பதையும், சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட பிரமாணங்கள் என்பதையும் ஞாபகமூட்டுவதுடன் உத்தியோக மொழிச் சட்டம், கோட்டு மொழிச் சட்டம் ஆகிய இரண்டும் தமிழர்கள் அனுபவித்து வந்த சலுகைகளையே புறக்கணித்தற்கு வழி வகுத்து விடுமென்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அந்நியராட்சிக் காலத்திலிருந்த, வீரசூரியா காட்டிய சட்டங்கள் இந்த நாட்டு மொழிகளுக்குப் பாகுபாடின்றி உரிமை வழங்கியிருந்ததையும் தற்போது ஆக்கப்படும் சட்டங்கள் பாகுபாடு காட்டுவதையும் சட்ட வல்லுநர் எவரும் இலகுவாசக் கவனிக்கக் கூடியதாயிருக்கும்.

ஆதலின் தற்போது தமிழ் மக்களின் உரிமைகள் அவர்களது தன் மானத்திற்கும், கௌரவத்திற்கும் ஊறில்லாத வகையில் தீர்க்கப்படவேண்டுமென்பதே எங்கள்கோரிக்கை.

## தமிழரசு செயல்கமிட்டி தீர்மானம்

யாழ்ப்பாணம், திங்.

மறியல் இயக்கத்தை 'ரயில்வே' நிலையங்களுக்கும் விஸ்தரிப்பதென்று நேற்றிரவு தமிழரசுக் கட்சியின் செயல் கமிட்டி முடிவு செய்தது.

புகையிரத சேவையை ஸ்தம்பிக்கச் செய்வதே இதன் நோக்கமாகும். நேற்றிரவு தமிழரசுக் கட்சியின் செயல் கமிட்டி யாழ்ப்பாணம் கச்சேரியில்கூடி தற்போது நடைபெற்றுவரும் சத்தியாக்கிரக இயக்கம் பற்றியும், அதை மேலும் விஸ்தரித்து நடத்துவதுபற்றியும் பரிசீலனை செய்

(6ம் பக்கம் பார்க்க)

## கச்சேரிக்குள்சென்ற காரியாதிகாரிக்கு மறியல்

### இன்று எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தலைமையில் சத்தியாக்கிரகம்

யாழ்ப்பாணம், திங்கள்

**நேற்று மாலை 6 மணிக்கு காங்கேசந்துறை தொண்டர்கள் தலைவர் எஸ். ஜே. வி. தலைமையில் சத்தியாக்கிரகத்தை மேற்கொண்டனர். சத்தியாக்கிரகிகளுக்குத் தெரியாமல் கச்சேரிக்குள் சென்ற காரியாதிகாரியொருவர் வெளியில் வரும்போது தடைசெய்யப்பட்டார்.**

நேற்று மாலை யாழ்ப்பாணம் கச்சேரிக்குள் காரியாதிகாரியொருவர் தொண்டர்களின் கண்ணில் படாமல் சென்றுவிட்டார். இராணுவ 'ஜீப்' ஒன்றின் பின்னால் அவர் சென்றபொழுது தொண்டர்கள் கவனிக்கவில்லையென்று தெரிகிறது. பிறகு காரியாதிகாரியொருவர் உள்ளே சென்று விட்டார் என்ற தகவல் சத்தியாக்கிரகிகள் மத்தியில் பரவியதும், திரு. வி.ஏ. கந்தையா, திரு. ஏ. அமிர்தலிங்கம் ஆகியவர்களின் தலைமையில் கச்சேரியின் 'பழைய பூங்கா' வாயிலில் மறியல் செய்தனர். காரியாதிகாரி உள்ளேயே இருந்தார். சிறிது நேரம் கழித்து அவர் சத்தியாக்கிரகிகளிடம் வந்து, அரிசி விநியோகம் சம்பந்தமாக உள்ளே போகிறவர்கள் மாத்திரம்தான் மறியல் செய்யப்படுவதாகக் கேள்விப்பட்டதாகவும் வேறுகாரணங்களுக்காக உள்ளே செல்கிறவர்கள் மறிக்கப்படமாட்டார்கள் என்று கருதி உள்ளே செய்வதாகவுங்கூறினார். அரிசி சம்பந்தமாகமாத்திரமல்ல எந்தக் காரணத்தைக்கொண்டும்வெளியிலிருந்து செல்பவர்கள் எல்லாரும் மறியல் செய்யப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

ஓர் கோயில் விஷயமாக தற்காலிக அரசாங்க அதிபருடன் பேசுவதற்காகவே தாம் உள்ளே சென்றதாகவும், இனிமேல் அப்படிச் செய்வதில்லையென்றும் கூறி காரியாதிகாரி வருத்தம் தெரிவித்ததாகத் தெரிகிறது. அதன்பிறகே அவர் வெளியில் வர இடம் விடப்பட்டது.

நேற்று நீர்கொழும்புத்தமிழர்களின் சார்பில் பணமுடிப்பொன்றை அங்கிருந்துவந்த மூன்று பேர் தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகத்திடம் அளித்தனர்.

(6-ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாண பொது மக்களுக்கு உணவு வசதி சேவை

### வர்த்தக தமிழ் இயக்க முயற்சி

யாழ்ப்பாணம், திங்கள்

அத்தியாவசிய தேவை ஏற்படும்போது மாத்திரம் சத்தியாக்கிரகத்தில் கலந்துகொள்வதென முடிவு செய்திருந்த யாழ்ப்பாண வர்த்தகர் தமிழ் இயக்கம் அரசாங்கத்தால் அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டால் முழுநேரமும் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொள்ளுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருவதாகத் தெரிகிறது. இதுவரையில் 1122 தொண்டர்கள் சேர்ந்திருக்கிறார்களென்றும் தொண்டர்கள் சேர்க்கும் முயற்சி தொடர்ந்து நடைபெறுவதாகவும் தெரிகிறது. தமிழுரிமைப் போராட்டத்தில் சாத்வீகமான முறையில் ஈடுபடுவேன் என்றும், தமிழரின் சுதந்திரப் போராட்

(6-ம் பக்கம் பார்க்க)

## 2000 சிறுபான்மைத் தமிழர் யாழ்ப்பாணம் கச்சேரி முன் மறியல்

யாழ்ப்பாணம், திங்கள்

சிறுபான்மைத் தமிழர் அறப்போர் முன்னணியின் கீழ் ஆவரங்கால் சர்வோதய சனசமூக நிலையம், கொற்றாவத்தை கி. மு. சங்கம், அல்வாயூர் சிறுபான்மைத் தமிழர் இயக்கம், சங்கானை சிறுபான்மைத் தமிழர் இயக்கம் ஆகிய சிறுபான்மைத் தமிழர் ஸ்தாபனங்கள் கடந்த சனிக்கிழமை தனித் தனியே பணமுடிப்புகளை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்திடம் வழங்கின. அத்துடன் மேற்படி முன்னணி கீழ்க்காணும் மகஜரையும் திரு, செல்வநாயகத்திடம் சமர்ப்பித்தது.

"தாங்கள் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களின் உரிமைக்காகத் தொடுத்த அறப்போரிலே, தொகுதி வாரியாகச் சிறுபான்மைத் தமிழர் பெருமளவிற் பங்குபற்றி, தங்கள் அறப்போர் வெற்றியீட்ட எமது உடல், பொருள், ஆவி, மூன்றையும் நாம் அர்ப்பணிக்கிறோமென்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்".

கடந்த சனிக்கிழமை பகல்

(6ம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியிலிருந்து தீவட்டி, சைக்கிள் ஊர்வலம்

### வாய்கட்டி வந்தார் எம். பி.

யாழ்ப்பாணம், திங்கள்

கிளிநொச்சியிலிருந்து சுமார் 200 தொண்டர்கள் தீவட்டியுடன் சைக்கிளில் ஊர்வலமாக வந்துசனிக்கிழமைஇரவு யாழ்ப்பாணத்தில் நடைபெறும் மறியலில் கலந்து கொண்டனர்.

திரு. ஏ. சிவசுந்தரம் எம். பி. யும் மற்றைய தொண்டர்களைப் போலவே கறுத்தத்துணியால் வாயைக்கட்டி சைக்கிளில் மேற்படி ஊர்வலத்துக்குத் தலைமை தாங்கி வந்திருந்தார்

## இராணுவத்தினர் தாக்கியதாகப் புகார்

யாழ்ப்பாணம், திங்கள்

பருத்தித்துறை வீதியில் சென்றுகொண்டிருந்த மூவர் அவ்வழியால் யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்த இராணுவ "ஜீப்" வாகனத்திலிருந்தவர்களின் எதிர்பாராத தாக்குதலுக்குள்ளாகிக் காயமடைந்ததாகத் தெரிகிறது. இருவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மற்றொருவர் சிகிச்சையளிக்கப்பட்டபின் வீடு திரும்பினர்.

சிறுப்பிட்டியைச்சேர்ந்த கே. அரசரத்தினம் என்பவர் யாழ்ப்பாணத்துக்கு நேற்று மாலை சைக்கிளில் வந்துகொண்டிருந்தார். கோப்பாய் நாவலர் பாடசாலைக்குச் சமீபத்தில் இவர் வந்தபொழுது யாழ்ப்பாணத்தை நோக்கி வந்துகொண்டிருந்த இராணுவ 'ஜீப்' வண்டியிலிருந்தவர்கள் தாக்கியதாகத் தெரிகிறது. தாக்குதல் காரணமாக அவரது வலது கையில் காயமேற்பட்டது.

நீர்வேலியைச்சேர்ந்த சலவைத் தொழிலாளியான சின்னக்குட்டி தம்பையா துணி மூட்டைகளுடன் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த பொ

(6-ம் பக்கம் பார்க்க)

## மணிவாக்கு

எதிர்காலத்தில் அமையவிருக்கும் பொறுப்பான சுயாட்சி அரசாங்கத்தில் கூட மக்களுடைய எதிர்ப்பைத் தெரிவிக்கச் சத்தியாக்கிரகம் அவசியமாக இருக்கும் என்றே நான் கருதுகிறேன்.

—மகாத்மா காந்தி


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் சார்வரி ஆண்டு பங்குனி மீ 21 உ (3-4-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna · Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## அரசியல் முட்டுக்கட்டை

சென்ற ஆறு வாரங்களாக இலங்கையிலே சிறப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இதுவரை என்றுமில்லாதபடி அரசியல் முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளது. இவ்விரு மாகாணங்களிலும் அரசாங்கமே செயல்படவில்லை என்று பிரதமரே பகிரங்கமாக ஒப்புக் கொண்டார். இவ்வித சிக்கலான நிலைமையை அரசாங்கம் எப்படித் தீர்க்கப்போகிறது? என்பதை உலகமெல்லாம் இன்று கூர்ந்து கவனித்து வருகின்றது.

இன்று அரசாங்கத்துக்கு இரண்டே வழிகளுண்டு. அவசரகால நிலைமையைப் பிரகடனம் செய்து, இராணுவ உதவியுடன் அடக்குமுறை ஆட்சியை நடத்துவது அதில் ஒன்ருகும். இரண்டாவதாக, தமிழ் மக்களின் பிரதிநிதிகளை அழைத்து, அவர்களது குறைகளைக் கேட்டு, தாராள மனப்பான்மையுடன் விட்டுக் கொடுத்து, அவர்களது ஒத்துழைப்பையும் அபிமானத்தையும்பெற்று, இம் முட்டுக் கட்டையைத் தீர்ப்பதாகும்.

இப்பொழுது கிடைத்து வரும் செய்திகளைப் பார்க்கையில் அரசாங்கம் முதலில் கூறிய வழியையே பின்பற்றுமென்று தெரிகிறது. பங்கீட்டு அரிசியை மக்களுக்குக் கொடுக்கவேண்டுமென்ற காரணம் கூறி, அவசரகால நிலைமையைப் பிரகடனம் செய்வதாக வைத்துக் கொள்வோம். அப்படிச் செய்வதால், மொழிப் பிரச்சினையோ இந்த அரசியல் முட்டுக்கட்டையோ தீர்ந்துவிடப்போவதில்லை. தமிழ்த் தலைவர்களுடன் ஏதாவது ஒரு முறையில் பேச்சு வார்த்தைகள் நடத்தி இரு தரப்பினரும் ஒரு சுமுகமான முடிவைச் செய்து கொள்வதால் தான் இந்தச் சிக்கல் தீரமுடியும்.

ஆனல் சத்தியாக்கிரகம் நீடிக்கும் வரை பேச்சுகள் நடத்த முடியாதென்று பிரதமர் பிடிவாதமாக இருப்பதாகத் தெரிகிறது. இந்த மனப்பான்மையைசென்னை 'ஹிந்து' பத்திரிகையும் ஒப்பவில்லை. நமது அரசியல் நிருபர் சுட்டிக் காட்டுவது போல், இது ஒரு முதலாளி - தொழிலாளி தகராறு அன்று. சத்தியாக்கிரகம் செய்யும் தமிழ் எம். பி.க்கள் எல்லாரும், பொது மக்களின் பிரதிநிதிகள். நாட்டின் நன்மையைக் கருதி, அவர்களுடன் எந்த நிலையிலும் பேச, பிரதமர் மறுக்க முடியாது.

பிரதமர் லண்டனிலிருந்து திரும்பி, இடைத்தேர்தல்களும் முடிந்துவிட்டன. இனி நிதானமாக தமிழ்ப்பிரச்னையைப் பற்றி யோசித்து ஒரு சுமுகமான முடிவைச் செய்ய பிரதமருக்கு இப்போது நல்ல வாய்ப்புக் கிடைத்துள்ளது. தமிழ்த்தலைவர்களும் இதுவரை சட்டமறுப்பு முதலியவற்றில் அவசரப்பட்டு இறங்கி விடாமல் அதிக பொறுமை காட்டியிருக்கிருர்கள். யாழ்ப்பாணத்தில் மூன்று வாரகாலமாகப் பங்கீட்டரிசி ஒரு குருட்டுப்போக்கினல் கொடுக்கப்படாவிடினும் இங்கு எவ்வித அசம்பாவிதமும் நடக்கவில்லை. சிங்கள, தமிழ்ப் பொது மக்கள் அமைதியையே வேண்டுகிருர்கள். ஆனல் சில அரசியல் சுயநலமிகள், இச்சந்தர்ப்பத்தில் விஷமம் செய்து, கலவரங்களைக்கிளப்பி அரசாங்கத்தைக் கவிழ்க்கக் காத்திருக்கிருர்கள். ஆகவே பிரதமர் சிறிமா எச்சரிக்கையாக இருந்து, அதற்கிடங்கொடாமல், நாட்டின் நன்மை கருதி, சிறுபான்மை சமூகத்தினரிடம் அதிக தாராள மனம் காட்டி, இந்த முட்டுக்கட்டையை அரசியல் தீர்க்கதரிசனத்துடன் தீர்க்க முற்படவேண்டும்.

# சத்தியாக்கிரகம்நடக்கையில் பேச்சுக்கள் ஏன் கூடாது?

## பிரதமர் சிறிமாவுக்கு நல்ல சந்தர்ப்பம்

— நமது அரசியல் நிருபர் —

மூன்று தொகுதிகளில் இடைத் தேர்தல்கள் நடந்து முடிந்ததும், தமிழர் பிரச்சினையைப் பற்றிக் கவனிப்பதாக பிரதமர் சிறிமா லண்டனிலிருந்து திரும்பியதும் ஒரு தமிழ் அன்பரிடம் தெரிவித்திருந்தார். இடைத் தேர்தல்கள் முடிந்தன. இரண்டு ஸ்தானங்கள் சுதந்திரக் கட்சிக்கும் ஒரு ஸ்தானம் ஐக்கிய தேசியக்கட்சிக்கும் கிடைத்ததால் பழைய நிலைமையில் எவ்விதத்தும் மாறுதல் இல்லை. பிரதமர் இங்கு வந்து அவ்வளவு தீவிர பிரசாரம் செயதிராவிடில், தேர்தல் முடிவுகள் வேறுவிதமாகவும் கூட மாறியிருக்கக் கூடும். எப்படியும் இம்முடிவுகள் பற்றிப் பிரதமர் அதிக மகிழ்ச்சி அடைய முடியாவிடினும் பழைய கட்சிப் பலம் பாதிக்கப்படாமல் காப்பாற்றப்பட்டது குறித்து அவர் திருப்தி அடையலாம். அந்த மட்டில் இது அவருக்கு ஒரு பெரிய கவலை நீங்கியது.

இடைத் தேர்தல்கள் முடிந்துவிட்டதால் இனித் தமிழர் பிரச்சினையைப் பற்றி அவர் என்ன செய்யப் போகிருர்? என்பதே இன்றைய முக்கிய கேள்வி.

* * *

இராணுவம், பொலிஸ் அட்டோர்னி ஜெனரல் காரியாலய அதிகாரிகள் முதலியோரின் ரஜாவை ரத்துச் செய்து விட்டதாக அறிவித்ததால் இங்கு, எந்தச் சமயமும் அவசரகாலப் பிரகடனம் செய்யப்படலாமென்று எதிர்பார்க்கப் பட்டுவருகிறது. இதற்கான விசேஷ சட்டமும் தயாராகி வருவதாகவும் சொல்லப்படுகிறது.

மூன்று வாரகாலமாக ரேஷன் அரிசி கொடுக்கப்பட முடியாமல் இருப்பதைக் காரணமாகக் கூறி, யாழ்ப்பாணத்தில் மட்டும் அவசரப் பிரகடனம் செய்யப்படலாமென்று பலத்த வதந்திகள் மூன்று நாட்களாக உலவி வருகின்றன.

ஆனல் எவ்வித பலாத்கார சம்பவங்களுமின்றி, சத்தியாக்கிரகம் மிக அமைதியாக நடந்து வருவதால், அவசரகால பிரகடனம் செய்வதற்கு அரசாங்கம் இரண்டு நாட்களாகத் தயக்கம் செய்துவருகின்றது. கூடுமானவரை அவ்வித பிரகடனம் செய்யாமலே நிலைமையைச் சமாளிக்க வேண்டுமென்பதே அரசாங்கத்தின் ஆவலாம். ஆனல் இரு மாகாணங்களிலும், அரசாங்கம் 6 வாரங்களாக ஸ்தம்பித்திருப்பதாலும், அரிசி விநியோகம் யாழ்ப்பாணத்தில் 3 வாரமாக நடைபெற முடியாமல் இருப்பதாலும் இனி அரசாங்கம் வாளா இருக்க முடியாதென்றும், அவசரப் பிரகடனம் பிறப்பித்து, தன்மதிப்பை இப்பகுதியில் நிலைநாட்டிக் கொள்ள முற்படுமென்றும் தெரிகிறது.

* * *

அவசரப் பிரகடனம் செய்வதால் அரசியல் பிரச்சினை தீர்ந்துவிடாது. தொடர்ந்து தங்கள் உரிமை கிடைக்கும் வரை போராட்டம் நடைபெறுமென்று தலைவர் எஸ். ஜே. வி. அறிவித்துள்ளார்.

இதற்கிடையே திரு. தொண்டமான், பிரதமரைச் சந்தித்து பேசியுள்ளார். தமிழர் பிரச்சினையைச் சுமுகமாக எப்படித் தீர்ப்பது? என்பதுபற்றித் தமது கருத்தைத் திரு. தொண்டமான் பிரதமரிடம் கூறியதாயும், தமது மதிப்பைக் குறைத்துக் கொள்ளாமல், இப்பிரச்சினையை எப்படிச் சுமுகமாகத் தீர்ப்பது என்பதுபற்றிப் பிரதமர் சிறிமா கவலை காட்டுவதாயும் தெரிகிறது.

இதற்கிடையே சமரசத்துக்கான புதிய முயற்சிகள் நடப்பதாயும் நிலைமையை எப்படியும் மோசமாக விட்டுவிடக் கூடாதென்று அரசாங்கம் கவலை கொண்டுள்ளதாகவும் அறிகிறேன்.

* * *

"நான் பதவியை ராஜினமாச் செய்தாலும் செய்வேன், சத்தியாக்கிரகம் நடக்கையில் பேச்சுவார்த்தைகளை நடத்த மாட்டேன்" என்று பொருள்பட, பிரதமர் சிறிமா மந்திரி சபைக் கூட்டத்தில் கூறியதாக ஒரு செய்தி தெரிவித்தது. லண்டனுக்குப் புறப்படு முன்பே, அவர் இதே கருத்தையே தெரிவித்தார்.

வேலை நிறுத்தம் நீடிக்கும் வரை சமரசப் பேச்சுவார்த்தைகளை நடத்த முடியாதென்றும் அதைக் கைவிட்டால்தான் பேச்சு நடத்த முடியுமென்றும் சில முதலாளிமார், தொழில் தகராறுகளில் கூறுவதுண்டு. பொய்க் கௌரவத்தால் காட்டப்படும் இந்த மனப்பான்மை தொழிற் தகராறுகளில் காட்டுவதும் சரியல்ல, அப்படி இருக்க நாட்டின் நல்வாழ்வுக்கான அரசியல் பிரச்சினைகளில் இப்படியான பிடிவாதம் காட்டுவது எவ்விதமும் சரியாகாது.

சத்தியாக்கிரகிகளோ, அல்லது தமிழ்த் தலைவர்களோ, சிறிமாவிடம் சம்பளம் பெறும் தொழிலாளரல்லர். தமிழ் எம். பி.க்களும், இலங்கைப் பொது மக்களின் பிரதிநிதிகள். பிரதமர் சிறிமாவாவது கவர்னர் ஜெனரலால் செனேட்டுக்கு நியமிக்கப்பட்ட ஒரு மெம்பர். ஆனல் தமிழ் பிரதிநிதிகள், பொது மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள். ஆகவே நாட்டில் அரசியல் அமைதியையும், ஒற்றுமையையும் ஏற்படுத்துவதுபற்றிப் பேச்சுக்கள் நடத்த, பிரதமர் சிறிமா நிபந்தனை போடுவது விபரீதமாகும்.

சென்னை 'ஹிந்து' பத்திரிகை கூறுவது போல் அரசாங்கத்தின் அதிகாரம், வடக்கு, கிழக்கு மாகாண பொது மக்களுடம் செல்லவில்லை. தமிழ்ப் பொது மக்களின் சம்மதமின்றி இங்கு எவ்வித ஆட்சியும் நடக்க முடியாதென்பதும் நிரூபணமாகியுள்ளது. இது பிரதமருக்கு நனகு தெரியும். என்ருலும் அரசாங்கத்தின் கௌவரவத்துக்குப் பங்கமில்லாமல், இந்த அரசியல் முட்டுக்கட்டையைத் தீர்க்க முடியுமா என்பதே பிரதமரின் இப்போதைய ஆவலும் கவலையும்.

ஆனல் இந்தப் பிரச்சினை முற்றி நாட்டில் வகுப்புக் கலவர மேற்பட்டு, இந்த அரசாங்கத்தைக் கவிழ்க்கப் பிரதமர் சிறிமாவின் சில அரசியல் எதிரிகள் ரகசியத் திட்டம் போட்டு வேலை செய்வதாகத் தெரிகிறது.

அடுத்த சில நாட்கள் மிகவும் முக்கியமானவை. இந்த அரசாங்கத்தின் எதிர்காலத்தையும், இலங்கையின் தலைவிதியையும் நிர்ணயிக்கக் கூடியவை. பிரதமர் சிறிமா, என்ன செய்யப் போகிருர் என்பதை உலகம் ஆவலுடன் கவனித்து வருகிறது.

## ஐயாறன் எழுதுவது

யாழ்ப்பாணத்திலே சென்ற மூன்றுவாரகாலமாக கூப்பன் அரிசி இல்லையல்லவா? அரிசி வாங்கிச் சாப்பிடும் எளிய குடும்பத்தவர் என்ன செய்கிருர்கள்! வர்த்தகர்கள் இது தான் சமயமென்று கொள்ளை லாபம் வைத்து ஒரு தட்டுத் தட்டப்பார்க்கிருர்களா? கடையில் அரிசி விலை என்ன? சத்தியாக்கிரகிகள் மீதும் தமிழரசுக் கட்சிமீதும் பொது மக்களுக்குக் கோபமா? என்று விசாரித்தேன். கூப்பன் அரிசி கிடைக்காததால் கஷ்டம்தான் என்ருலும் இந்தக் கஷ்டத்தை பொதுமக்கள் பெறுமையுடன் சகித்துவருகிருர்கள். 'அடிமை அரிசியைவிட உரிமையே முக்கியம்' என்று பொதுமக்களில் பலர், சில புதிய இடங்களில் கொடுக்கும் கூப்பன் அரிசியை வாங்க மறுக்கிருர்கள்.

சங்கக் கடையிலே தலை தட்டிய கொத்து அரிசி 70 சதம். மற்றக் கடைகளில் முழுக்கொத்து அரிசி 90 சதம். விலையிலே வித்தியாசமில்லை. ஆங்காங்கே வர்த்தகர் கூடி, அரிசியில்எவ்விதலாபமும்வைக்காமல், கொள்முதல் விலைக்கே மக்களுக்கு விற்பதென்று தீர்மானித்து அவ்விதமே செய்து வருகிருர்கள்.

கிடைப்பது நாட்டரிசி, சத்துள்ளது. கஞ்சி வைத்துக் காய்ச்சிக் குடித்தாலும், மற்ற "பரதேசி" அரிசி சாப்பிடுவதைவிட அதிக தெம்பாக இருக்கிறதென்று கூறுகிருர் ஓர் அன்பர்.

மொழி உரிமைக்காக மக்கள் இவ்வளவு தியாகம் செய்கையில், வர்த்தகர் அரிசியில் லாபம் வைத்து விற்பதில்லை என்று முடிவுசெய்து மக்களின் உணவுப் பிரச்சினையைத் தீர்க்கக் கூடுமான உதவி செய்கிருர்களாம். இதையெல்லாம் கேட்க மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

* * *

அரிசி கிடைக்காததற்கு சத்தியாக்கிரகிகளே காரணமென்றும், அவர்களே தடையாக இருப்பதாகவும் அரசாங்க அறிக்கை தெரிவித்தது. இரண்டு வாரம் அரிசி கிடைக்காமலிருந்தால், பொதுமக்கள் ஆத்திரம் கொண்டு சத்தியாக்கிரகிகள் மீது பாய்ந்து, அவர்களைக் கலைத்துவிடுவரென்றும், சத்தியாக்கிரகம் பிசுபிசுத்துவிடும் என்றும், கொழும்புப் பத்திரிகையொன்று எழுதியிருந்தது.

இதைப்பற்றி ஓர் அன்பரைக் கேட்டதற்கு, பொதுமக்களுக்கு சத்தியாக்கிரகிகள்மீது எவ்வித கோபமுமில்லை என்றும், ஆனல், அரசாங்கம் முன்னர் செய்தபடி அரிசி வழங்காமல் பிடிவாதம் காட்டுவதால் அரசாங்கத்தின்மீதுதான் அவர்களுக்கு அதிக மனக்கசப்பு ஏற்பட்டுள்ளதாகவும் கூறினர்.

கூப்பன் அரிசி விற்க, புதிதாக உத்தரவு பெற்ற ஒருவர், அதைச் சேமித்து, பிளாக்மார்க்கெட்டில் விற்க முயற்சி செய்து வருவதாக மற்றோர் அன்பர் ரகசியமாக வந்து தெரிவிக்கிருர்! அட கடவுளே!

* * *

"உரிமைக்காகவா ஏகாம்பரம் உயிர் கொடுத்தார்? பொய்யைப் போடவேண்டாம்"என்று 'தமிழ்வேந்தன்' என்ற ஓர் அன்பர் ஒரு 'கார்டு' எழுதியுள்ளார். "ஈழநாடு" பத்திரிகையில் "ஏகாம்பரம் உயிரைத் தியாகம் செய்தார்" என்று தலைப்புக் கொடுத்திருந்ததையே அன்பர் குறிப்பிடுகிருர்.

மூதூர் முதல் பிரதிநிதி, பொலிஸ் தடியடி பட்ட சில நாட்களில் உயிர் துறந்தார். முன்னர் லாகூரில் சைமன் கமிஷன் பகிஷ்காரத்தில், பொலிஸ் தடியடிபட்ட லாலா லஜபதிராய் சில நாட்களுக்குப் பின இறந்தபோது, அவரும் உயிர்த் தியாகம் செய்ததாகவே பலரும்கண்ணீர் விட்டனர். ஆகவே ஏகாம்பரம் உயிர்த் தியாகம் செய்தார் என்று கூறுவதில் தவறு உண்டா?

ஆசிரியருக்குக் கடிதம்

## தமிழுக்கு அந்தஸ்து எங்கே?

அரசாங்கத்தின் மொழிக் கொள்கைபற்றி திரு என். ஈ. வீரசூரியா கியூ. ஸி. விடுத்துள்ள அறிக்கை ஒருதலைப் பட்சமானது. அதை, பாரபட்சமற்றதென்று கருதமுடியாது.

இலங்கையிலுள்ள சிங்கள, தமிழ் இனத்தினர் வெளிநாட்டு ஆக்கிரமிப்புக்குமுன் தனிப்பட்ட, சுதந்திர வகுப்பினராயிருந்தனர். பிரிட்டிஷ் ஆட்சியின்போதுதான் இரு வகுப்பினரும் பொது ஆட்சியாளரின்கீழ் ஒரு தேசிய சமுதாயமாக இருக்கவேண்டிவந்தது. சுதந்திரம்கிடைத்தபொழுது இரு வகுப்பினரும் சமஅடிப்படையில், இரு மொழிகளுக்கும் சமத்துவம் உள்ள நிலையில் சுதந்திரத்தைப் பெற்றனர். அதற்கேற்ப சமீபகாலம்வரை அரசாங்க மொழிகள் இலாகா ஒன்று இயங்கிவந்தது. பின்பு அரசாங்கமும், ஆதிக்க ஆசை வெறிகொண்ட அரசியல்வாதிகளும் தமிழ் மொழியை முற்ருகப் புறக்கணித்து, சிங்களம் மட்டும் சட்டத்தை நிறைவேற்றினர். ஆனல் இந்த நியாயமற்ற ஒருதலைப்பட்சமான நடவடிக்கையின் கேட்டை திரு. வீரசூரியா அறியத் தவறிவிட்டார்.

தமிழ் மக்கள் தங்கள் தாய் மொழியை எவ்விதமெல்லாம் உபயோகித்துக்கொள்ள வாய்ப்பு இருக்கிறதென்று திரு. வீரசூரியா சுட்டிக்காட்டுகிருர். ஒருதமிழன் தன் மனைவியுடன் தமிழில் பேசவும் சலுகை அளிக்கப்பட்டிருக்கிருன் என்பதைத்தான் அவர் விட்டு விட்டார்.

தற்போதைய அமைப்பில் தமிழ் மொழி, தமிழரின் அந்தஸ்து ஆகியன எப்படியிருக்கிறதென்பதைமட்டும் வேண்டுமென்றே அவர் தன் அறிக்கையிலிருந்து விட்டிருக்கிருர். சிங்கள மக்களும், சிங்கள மொழியும் தமிழரையும் தமிழ் மொழியையும்விட உயர்ந்த அந்தஸ்தைவகிக்கின்றன. சகல தஸ்தாவேஜுகளும் சிங்களத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. தமிழ்ப் பகுதிகளிலும் அரசாங்கத் தஸ்தாவேஜுகள் சிங்களத்தில் இருந்தால் அதன் அர்த்தம் என்ன! சாதாரண தமிழ் விவசாயி, வியாபாரி, தொழிலாளி ஆகியோர் இதை எவ்விதம் புரிந்துகொள்ளமுடியும் என்பதைப் படித்த இந்த

(6-ம் பக்கம் பார்க்க)

# 'சுயநிர்ணய உரிமையை ஸ்தாபித்துவிட்டோம்'

## 'அரிசியைவிட உரிமையேபெரிது' யாழ்ப்பாணத்தில் பலகட்சி பொதுகூட்டம்

யாழ்ப்பாணம், திங்கள் "சுயநிர்ணய உரிமையை நாங்கள் ஸ்தாபித்துவிட்டோம். எந்த அவசரகால சட்டத்தினுலும் தமிழ்பேசும் இனத்தை அடக்கவோ அன்றி அழிக்கவோ முடியாது. இதை அரசாங்கமும் உணரும்". என்று டாக்டர் நாகநாதன், சனிக்கிழமை மாலே ஜின்னுமைதானத்தில் நடைபெற்ற கட்சி சார்பற்ற ஓர் கூட்டத்தில் தெரிவித்தார்.

சுகவீனம் காரணமாக திரு. செல்வநாயகம் வராததால் டாக்டர் நாகநாதன் கூட்டத்துக்கு தலைமை வகித்தார். "சத்தியம் உண்மை இவ்விரண்டையும் அடிப்படையாக வைத்து சத்தியாக்கிரகம் செய்யும் நாங்கள், சுயநிர்ணய உரிமையை ஸ்தாபித்து விட்டோம். பீரங்கியோ அன்றி துப்பாக்கி முனைகளோ எங்களை ஒன்றும் செய்ய முடியாது, எந்த இராணுவத்தையும் கண்டு அஞ்சமாட்டோம். இன்று மொழிப்பிரச்சினையாக இருக்கும் இத்திட்டம் நாளை தமிழ் மக்களை அழிக்கும் சதித்திட்டமாகவும் மாறும் என்பதை ஒவ்வொரு தமிழ்ப்பேசும் மகனும், மகளும் உணர்ந்துவிட்டனர். எங்கள் இனத்தை அழிக்க முடியாது! நாங்கள் நிச்சயம் வெற்றி பெறுவோம். தமிழர்களே ஆளப்போகும் கட்டம் வெகுவிரைவில் வந்துவிட்டது" என்று டாக்டர் நாகநாதன் கூறினர்.

அடுத்து கோப்பாய் எம். பி. திரு. எம். பாலசுந்தரம் பேசுகையில், "மதத்தாலே முஸ்லீம்கள் வேறுபட்டாலும், மொழியாலே தமிழ்மக்களாக இருக்கிருர்கள். என்பதை கல்வி மந்திரி பதியுதீன் மாமூத் மறந்துவிட்டார் போலிருக்கிறது. இப்போது பாஷையிலே இருக்கும் இப்போராட்டம் நாளை நமது மதத்துக்கும் சாவுமணி அடிக்கும் என்பதில் என்ன சந்தேகம்? தமிழ்மக்களை ஒதுக்கிவிட்டு இந்நாடு ஒருபோதும் பொருளாதாரத்தில் முன்னேறமுடியாது" என்ருர்.

நகரமேயர் திரு. துரைராஜா பின்வருமாறு குறிப்பிட்டார்:-

யாழ்ப்பாண மக்கள் எல்லோரும் ஒரேமுகமாக ஒற்றுமையாக இருக்கின்ருர்கள். அரிசிக்காக அஞ்சமாட்டார்கள். இந்தியப் பிரதமர் எங்கேயோ இருக்கும் காங்கோவைப்பற்றிப் பேசுகின்ருர். ஆனல் அயலில் இருக்கும் இங்குள்ள நிலைமைபற்றி நினைத்துக்கூடப் பார்க்கின்ருர் இல்லை.

### தமிழரிடமிருந்து ராஜினமா?

உடுப்பிட்டி எம். பி. சிவசிதம்பரம் கூறியதாவது:-

பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா, "தமிழர்கள் சத்தியாக்கிரகத்தை கைவிடும் வரைக்கும் பேச்சுவார்த்தைகள் வைத்துக்கொள்ளமாட்டேன். சிலசமயம் நான் இராஜினுமா செய்யக்கூடும் என்று கூறியிருக்கின்ருர்". ஆனல் சென்ற பெப்ரவரி மாதம் இருபதாம் திகதியிலிருந்தே தமிழ் மக்களிடமிருந்து அவர் இராஜினமா செய்துவிட்டார் என்பதை நாங்கள் அறிந்துகொண்டோம். அடிமைகளாக தமிழினம் வாழ்ந்ததுமில்லை வாழப்போவதுமில்லை.

யாழ்ப்பாணம் எம். பி. திரு அல்பிரட் துரையப்பா பேசுகையில் சகல கட்சிகளைச் சேர்ந்தவர்களும் சேர்ந்து மொழிக்காக ஒன்ருகியிருப்பதுவே எமது முதல்வெற்றியென்ருர். மொழிக்காக பாடுபடும் எவருடனும் ஒத்துழைப்பேன் என்று நான் முன்பு கூறியது போல் இன்று எமது மொழிக்காக, நமது உரிமைக்காக இந்த அறப்போரில் குதித்துஆவியைத் துறக்கவும் ஆயத்தமாகவிருக்கின்றேன் என்று குறிப்பிட்டார்.

இதன் பின் வட்டுக்கோட்டை எம். பி திரு. அமிர்தலிங்கம் பின்வருமாறு கூறினர்:-

(5-ம் பக்கம் பார்க்க)


15-4-61இல் வெளிவருகிறது!

வட-இலங்கைத் தமிழ் நூற் பதிப்பக வெளியீடு

**இக்கால வாணிப முறை**

ஆக்கியோன்:

கலைப்புலவர் க. நவரத்தினம் அவர்கள், F. C. I.

(ஆசிரியர், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.)

இது பொதுத் தராதரப் பத்திர (G. C. E.) வகுப்புப் பாடத்திட்டத்திற்கமைவான வர்த்தக கணித நூல்.

இந்நூலில்

வாணிபத்துக்கும் பொருளாதாரத்துக்குமுள்ள தொடர்பு, வியாபாரத்தோடு தொடர்புடைய ஆவணங்கள், போக்குவரவுச் சாதனங்களின் அமைவு, வங்கி காசோலை உண்டியல் என்பன பற்றிய விளக்கம், நட்டஈடு, பங்கு வியாபாரம், பண்டசாலை அமைப்பு, அதன் விதிகள், இக்கால மேனட்டு வியாபார முறை என்பன விளக்கப்பட்டுள்ளன.

இந்நூல் மாணவருக்கு மாத்திரமன்றி வியாபார நிலையங்களோடு தொடர்புடைய தொழிலாளர்க்கும் அவற்றை நடாத்தும் வியாபாரிகளுக்கும் பெரிதும் உதவிபுரியக் கூடிய நூல். வாழ்க்கையோடு சம்பந்தமுடைய பல போதிய பயிற்சிகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

விற்பனை உரிமையாளர்:

**தனலக்குமி புத்தகசாலை**

சுன்னுகம்.


# லாவோஸ்
# பிரிட்டிஷ் யோசனையை ரஷ்யா ஏற்றது

## நிலைமை நம்பிக்கையளிப்பதாய் நேரு-கென்னடி கருத்து

மாஸ்கோ, ஏப்ரல் 1

**லாவோஸ் பற்றி பிரிட்டன் தெரிவித்த யோசனைகளை ரஷ்யா ஏற்றுக் கொண்டிருப்பதாயும், இது சம்பந்தமான முடிவு பிரிட்டனுக்குத் தெரிவிக்கப்பட்டிருப்பதாயும், அமெரிக்க ஜனுதிபதி கென்னடிக்கும் பிரிட்டனுக்கனுப்பிய கடிதத்தின் நகல் ஒன்று சேர்க்கப்பட்டதாயும் அறிவிக்கப்பட்டது.**

லாவோஸ் பற்றி பலதேச மகாநாடு எங்கே, எப்போது கூடவேண்டுமென்ற உடன்பாட்டுக்கு வருவது அவசியமென்ற பிரிட்டனின் யோசனைக்கு, இம்மகாநாடு கம்போடிய தலைநகரில் கூடலாமென ரஷ்யா யோசனை தெரிவித்திருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

சர்வதேச கட்டுப்பாட்டுக் கமிஷன் புதுடில்லியில் கூடி அறிக்கை சமர்ப்பிக்கவேண்டுமென்றும் கூறப்பட்டிருக்கிறது. பல தேசமகாநாட்டுக்குத் தடங்கல் இருக்கக்கூடாதென்றும், லாவோஸில் நடுநிலைமை அரசாங்கம் இருக்கவேண்டும் என்பது அந்நாட்டு மக்களைப் பொறுத்த விஷயமென்றும், உள்நாட்டிலுள்ள பலகோஷ்டிகளும் தேசிய ஒற்றுமைக்குப் பேச்சுவார்த்தை நடத்தவேண்டுமென்றும் ரஷ்யா கூறியிருப்பதாய்த் தெரிகிறது.

இளவரசர் சுவர்ணபூமாவின் அரசாங்கமே சட்டபூர்வமான அரசாங்கம் என்பதை ரஷ்யா ஏற்றுக் கொண்டிருக்கிறதாம். ரஷ்யாவின் பதில் பிரிட்டனிடம் சேர்க்கப்பட்ட ஒரு மணி நேரத்திற்குப்பின் திரு குருஷ்ஷேவுடன் பேச்சுவார்த்தை நடத்த வருமாறு மாஸ்கோவிலுள்ள அமெரிக்க ஸ்தானிகர் அழைக்கப்பட்டார். 90 நிமிஷம் நடைபெற்ற இப்பேச்சுவார்த்தையின் விபரம் தெரியவில்லை.

லாவோஸில் சமாதானத் தீர்வு காண்பதற்கான அறிகுறி தென்படுவதாயும் இது நம்பிக்கையளிப்பதாயிருப்பதாயும் பிரதமர் நேரு கூறினர்.

சோவியத் அறிக்கை கிடைத்வுடன் அமெரிக்க அதிபர் கென்னடி விடுத்துள்ள அறிக்கையில் ரஷ்யாவின் சில நிபந்தனைகள் ஒப்புக்கொள்ளப் படாவிட்டாலும், நிலைமை நம்பிக்கையளிப்பதாய் இருக்கிறதென்றும், லாவோஸில் நிலைமையைச் சீர்ப்படுத்த அமெரிக்கா தன்னல் இயன்ற அனைத்தையும் செய்யுமென்றும் கூறினர்.

லாவோஸில் இடதுசாரிகள் வெளி உதவியுடன் தங்கள் தாக்குதலைத் தீவிரப்படுத்தியிருப்பதாய் அறிவிக்கப்படுகிறது.

### இந்தியாவின் நடுநிலைமை பற்றி நேரு

புதுடில்லி, ஏப்ரல், 1

வெளி உறவைப் பொறுத்தவரை இந்தியாவின் நடுநிலைமைக் கொள்கை சரியானது என நிரூபிக்கப்பட்டிருப்பதாயும் இப்போது 2 நாடுகள் தவிர உலக நாடுகள் அனைத்தும் இந்தியாவின் நேர்மையை ஒப்புக்கொள்கின்றன என்றும் பிரதமர் நேருகூறினர். ஆனல் சீனவும், பாகிஸ்தானும் இந்த நேர்மையை ஒப்புக்கொள்ள மறுக்கின்றன என்றும் அவர் கூறினர். அமெரிக்காவில் புதிய நிர்வாகத்தின் கொள்கை மாறுதலடைந்திருப்பதாயும், இந்தியாவுக்கு அவை அனுசரணையாய் இருப்பதாயும் நேரு குறிப்பிட்டார்.

### ஆசிய மகாநாடு கூட்டுக

ஜகாத்தா ஏப்ரல் 1

2 வது ஆசிய மகாநாடு ஒன்றைக் கூட்டவேண்டுமென இந்தோனேஷியா, சீன ஆகிய நாடுகளின் வெளிநாட்டு மந்திரிகள் கூட்டறிக்கை ஒன்றில் கேட்டுள்ளனர்.


**மொணரு அன் ரோஸ் பப்படங்கள்**

நாவிற்கு ருசியுடன் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு தனிஉளுந்தில் சுகாதார முறைப்படி தயார் செய்யப்படுவது

மொணரு அன் ரோஸ் பப்படங்கள்

மூவர்ண கலர் லேபிளுடன் மயில் - ரோஸ் அடையாளமிட்டு

இலங்கையில் எல்லா இடங்களிலும் விற்பனையாகிறது.

தயாரிப்பவர்கள்:

**ஏ. எம். புகாரி அன் கோ**

99, நாலாம் குறுக்குத் தெரு,

கொழும்பு.



**நீரழிவு வியாதிக்கு**

புத்தம் புதிய மருந்து

ஜெர்மன் ஆராய்ச்சி நிபுணர்களால் தயாரிக்கப்பட்ட

**"டயமெலன்"**

(DIA MELLON)

வியாதியஸ்தர்களுக்கு இலவச ஆலோசனையும் அளிக்கப்படும்.

25 வில்லைகள் கொண்ட போத்தல் ஒன்றுக்கு ரூ. 6-50

இலங்கை விநியோகஸ்தர்கள்:

போன்: 4805

**நியூ கொழும்பு மெடிக்கல் ஸ்டோர்ஸ்**

82, மெயின் வீதி,

கொழும்பு.

## வரி விளம்பரம்

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தர வாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 10-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனும்.

வைத்தியர் பரிபூரணானந்தர்,
கைலாசபிள்ளையார் கோவிலடி,
Advt. 58 யாழ்ப்பாணம்.

### தேவை

எமது ஷெல் நிரப்பு நிலையத்திற்கு ஒரு பம்பரும் (Pumper) களஞ்சியத்திற்கு ஒரு காவல்காரனும் தேவை. விரும்புவோர் தமது வயது, தராதரம், தேவைப்படும் சம்பளம் முதலிய விபரங்களுடன் கீழ்க்கண்ட விலாசத்திற்கு 12-4-61க்கு முன் மனுச்செய்யவும்.

தலைவர்
தென்-யாழ்ப்பாணம்
ப. நோ. கூ. ச. சமாசம்,
Advt. 87 கிளிநொச்சி

### தேவை

யாழ்ப்பாணம் நாவலர் வீதியிலுள்ள **செல்காஸ் சேட் தொழில் நிலையத்துக்கு** சேட் தைப்பதில் அனுபவம் வாய்ந்த இளம் பெண்கள் தேவை.

மெஷின் உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

விபரங்களுக்கு:
**செல்காஸ் சேட்தொழில்நிலையம்**
221, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## வார்ஸா ஒப்பந்த நாடுகள்

பெர்லின், 1

வார்ஸா ஒப்பந்த நாடுகள் தங்கள் இராணுவ பலத்தை மேலும் அதிகரிக்கமுடியாது செய்திருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்; காலை 7, பகல் 12.45, மாலை 6, இரவு 9,

**திங்கள் 3-4-61**

காலை 6-45 உதயகீதம் 6-50 சைவநற்சிந்தனை 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை 7-15 காலைக் கதிர் 7-30 திரை இசை 8-00 வீணை 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம் 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள் 5-15 நாகேஸ்வரி சபாபதி—வீணை 5-45 திரை இசை 6-15 கிராமசஞ்சிகை 6-45 வாத்தியக் கோஷ்டி.

இரவு 7-00 நேயர்விருப்பம் 7-30 வி. லோகநாதன்—பேச்சு 7-45 எஸ். பரம்தில்லைராஜா—பாட்டு 8-45 இஸ்லாமிய நிகழ்ச்சி 9-15 இஸ்லாமிய கீதங்கள் 10-00 நிலைய ஒலிப்பதிவுகள்.

### திருச்சி

(செய்திகள்: காலை7-15, பகல் 2, இரவு 7-15)

காலை 7-30 ஜானகி வேணு கோபாலன்—பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு 1-00 ஜானகி வேணு கோபாலன்—பாட்டு 2-30 வி. கிருஷ்ணமூர்த்தி—பாட்டு.

மாலை 4-45 வி விதபாரதி (கர்நாடக சங்கீதம்)

6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 இம்மாதப்பாடல் 7-35 நல்லுரை 7-40 திரைப்பட இசை 8-00 சங்கீத உபன்யாசம் 9-30 வி. கிருஷ்ண மூர்த்தி—பாட்டு.

# 'சம்பளம் கொடுக்க உடன் நடவடிக்கை எடுக்கவும்'

## வித்தியாபகுதிக்கு யாழ்ப்பாண தலைமை ஆசிரியர் சங்கம் தந்தி

யாழ்ப்பாணம், திங்கள் ஆசிரியர்களுக்கு பங்குனி மாதச் சம்பளம் இன்னும் கிடைக்கவில்லை. அவர்கள் மிகவும் கஷ்டத்துக்குள்ளாகியிருக்கின்றனர். மிகவிரைவில் அவர்களது சம்பளத்தையும் புதுவருஷ முற்பணத்தையும் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளும் தந்திச் செய்தியொன்றை வித்தியாபகுதிக்கு அனுப்புவதென்று யாழ்ப்பாணத் தலைமை ஆசிரியர் சங்கத்தின் நிர்வாகசபை தீர்மானித்துள்ளது.

நிர்வாக சபையின் கூட்டம் சனிக்கிழமை நடைபெற்றது.

தலைமை ஆசிரியர்களிடமிருந்து அவர்களது நிர்வாகக் கஷ்டங்கள் பற்றிக் குறிப்பிட்ட கடிதங்கள் கூட்டத்தில் ஆராயப்பட்டன.

பள்ளிக்கூட விடுமுறை நாட்கள் பரிபாலனச் செலவு தளபாட பாதுகாப்பு, காவற்காரர் நியமனம் பற்றிய விஷயங்கள் குறித்து ஆலோசித்து வித்தியாபகுதிக்கு ஒருமகஜர் அனுப்புவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

இது பற்றி சங்கச் செயலாளர் திரு. ஈ. பி. குமாரசாமி பேசுகையில் பங்குனி மாதச் சம்பளம் புதுவருஷத்துக் கிடையில் கொடுக்கப்படுவதற்கு ஒழுங்குசெய்யப்பட்டுள்ளதாகப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தபோதிலும் அதுகுறித்து நம்பிக்கையான தகவல் இல்லாததாலேயே சம்பளம் கொடுக்க நடவடிக்கை எடுக்கும்படி வித்தியாபகுதிக்கு தந்தி மூலம் வேண்டுகோள் விடவேண்டிய அவசிய மேற்பட்டுள்ள தென்றார்.

## டில்லியில் பிரெஞ்சு வெளிநாட்டு மந்திரி

பிரெஞ்சு வெளிநாட்டு மந்திரி, புதுடில்லி வந்திருக்கிறார். ஸீட்டோ மகாநாட்டிலிருந்து தாயகம் செல்லும் வழியில் இங்கு வந்துள்ள அவர், பிரதமர் நேருவுடன் சர்வதேசப் பிரச்சினைகள் பற்றிப் பேசப் போவதாயக் கூறினர். பிரெஞ்சு மந்திரி, புதுடில்லியில் 2 தினங்கள் தங்குவார்.

வசந்தா அதிசய ஆகாரம்
சத்துள்ள
**குரக்கன் மா**
இதை ஒருமுறை பாவித்தால் உண்மை விளங்கும்.
இது
**என். கே. மூர்த்தியின் ஸ்பெஷல் தயாரிப்பு**
484, கே. கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.

ஒரு கரண்டிபாலின் தரத்தை எந்தத் தேநீரும் மீறமுடியாது




இலங்கை தேநீரை அறியும்!

இலங்கை தேநீரை அறியும்! இது "மில்க்மெயிட்"டையும் அறியும்—இந்தச் சிறந்த பால் தேநீர் பருகுவதில் இன்பத்தையும் அதிகரிக்கும். உங்களுக்குச் சிறந்த—மிகவும் சுத்தமான பால் எனத்தெரிவு செய்யப்பட்டு நெஸில்ஸ் ஸ்தாபனத்தாரால் தயாரிக்கப்பட்டது. இது மிகவும் சிறந்த ரகமும் பணத்துக்கேற்ற நிறைந்த பெறுமதியும் கொண்டது. எப்பொழும் "மில்க்மெயிட்"பாலையே கேட்டுவாங்குங்கள்.




தேனீர் தயாரிப்பதற்கான ஐந்து பொன்னான விதிகள்:



* பக்கெட்டில் அடைக்கப்பட்ட திறமான தேயிலை
* உஷ்ண தேநீர்ப் பானை
* ஒருவருக்கு ஒரு கரண்டிப் பால். பானைக்கு ஒன்று
* சுத்தமாக கொதித்த வெந்நீர்
* 3-4 நிமிடங்களுக்கு ஊற விடுதல்.

ஆனல்! "மில்க்மெயிட்"பாலை எப்போதும் மறவாதீர்கள்.

"மில்க்மெயிட் பால்" — சிறந்த பால்

### சுயநிர்ணய உரிமையை

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றரை மாதங்களாக பேச்சை மறந்து உங்கள் முன் நிற்கின்றோம். நமக்கெல்லாம் எதையும் தாங்கும் இதயம் வேண்டும்!

சீமையிலே, சில சிங்களவர்கள் மத்தியிலே பேசிய நிதிமந்திரி அரிசியை அனுப்பாமல் விட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்று கூறினராம். ஆனால் நாவாந்துறையிலே தெருவில் கிடந்து தவம்செய்த ஏழை மக்கள் "அடிமை அரிசி வேண்டாம் திருப்பி எடு" என்று தெரிவித்த அந்த அற்புத நிகழ்ச்சியைக் கண்டிருந்தால், எங்களுக்கு அரிசியா உரிமையா பெரிது என்பதை அவர் அறிந்திருப்பார். எது வந்தாலும் வரட்டும் என்ற இறுதிக் கட்டத்தில் இருக்கும் எங்களுக்கு அவசரகாலச் சட்டம் என்ன செய்துவிடப்போகிறது?

இதன் பின் பேசிய ஹாஜி வி. எம். எம். அபுஸாலி கூறியதாவது:-

இன்று நாம் எல்லோரும் ஜீவ மரணப் போராட்டத்தின் இறுதிக் கட்டத்தில் இருக்கின்றோம். நாம் முஸ்லிம்கள், இந்து சமயத்தவர்கள், கிறிஸ்தவர்கள் என்ற மத அடிப்படையை விட்டு நமது மொழி தமிழ் என்ற எமது உரிமைப் போட்டத்தில் இறங்கி வெற்றி பெறுவோம்.

இதைத்தொடர்ந்து திருமதி அமிர்தலிங்கம் பேசுகையில் மட்டக்களப்பு திருகோணமலை ஆகிய இடங்களில் முஸ்லிம் மாதர்கள் மிகவும் தீவிரமாக பங்குபற்றுகிறார்கள். இங்கும் அதே நிலை ஏற்படவேண்டும். முஸ்லிம் மாதர்களே உரிமைப் போருக்குத் திரண்டுவாருங்கள்" என்று கேட்டுக்கொண்டார்.

பருத்தித்துறை எம். பி. திரு. துரைரத்தினம், எட்டாம் வட்டாரப் பிரதிநிதி திரு ஆ. துரைராஜசிங்கம் உதவி மேயர் திரு. செல்லத்துரை, ஜனாப் நூர்முகமது ஜனாப் வி. முத்துராஜா, திரு.செ. இராசா ஆகியோரும் பேசினார்கள்.

# காங்கோவில் உள்நாட்டு சண்டை மூண்டது

## அடக்குவதற்கு 1000 இந்திய துருப்புகள் விரைந்தன

லியப்போல்ட்விலி, ஏப். 1

கடாங்கா ஜனாதிபதி ஷோம்பேயின் துருப்புக்களுக்கும் லுமும்பா ஆதரவு துருப்புக்களுக்குமிடையே ஏற்பட்டுள்ள சண்டையைத் தடுக்கும்பொருட்டு ஐ. நா. படையைச் சேர்ந்த 1000 இந்தியத் துருப்புக்கள் காமினா ராணுவத் தளத்திலிருந்து விமானமூலம் அனுப்பப்பட்டன. உள்நாட்டுப் போரைத் தடுக்கும் பந்தோபஸ்து சபையின் தீர்மானத்திற்கிணங்க பரீத துருப்புக்கள் அனுப்பப்பட்டதாய் ஐ. நா. அதிகாரி ஒருவர் கூறினர். லுமும்பா ஆதரவு துருப்புகளுடன் ஒருபக்கம் ஷோம்பேயின் துருப்புக்களும் மற்றொரு பக்கம் கஸாய் மாகாண கலோஞ்சியின் துருப்புக்களும் தாக்குதல் நடத்துகின்றன என்றும் ஷோம்பே கலோஞ்சி உடன்பாடு ஒன்றின் கீழ் இத்தாக்குதல் நடைபெறுகிறதென்றும் கூறப்படுகிறது. கலோஞ்சியின் படையில் சம்பளத்திற்காகப் பணிபுரியும் பிரெஞ்சுக் காரரும் பெல்ஜியர்களும் இருக்கின்றனர்.

சண்டை பற்றிய செய்தி கிடைத்தவுடன் இந்தியத் துருப்புக்கள் விமானத்தில் அனுப்பப்பட்டன.

அதே சமயம் 2300 பரீத போர்த் துருப்புக்கள் நேற்று 1000 டன் சாதனங்களுடன் காங்கோ செல்வதற்காக நேற்று பம்பாயிலிருந்து கப்பல் ஏறினர்.

## மத்திய இந்தியாவில் துப்பாக்கி பிரயோகம்

### 12 பேர் பலி!

மத்திய இந்தியாவிலுள்ள யக்டல் பூரில் பொலிஸ் நிலையம் ஒன்றை 10,000 பேர் வில், அம்பு ஆகிய கருவிகளைக் கொண்டு தாக்கியதன் காரணமாய் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதன் விளைவாய் 12 பேர் கொல்லப்பட்டனர் என்றும், 5 பேர் காயமடைந்தனரென்றும் அறிவிக்கப்படுகிறது. நாகபுரியிலும் ஓர் ஆர்ப்பாட்டம் நடைபெற்றதாயும், அங்கு பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாயும் அறிவிக்கப்படுகிறது. இப்போது நிலைமை கட்டுக்கடங்கியுள்ளது. விதர்பாராஜ்யம் கோரி இவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

## சுபசிங்க பாதுகாப்பு சபைத் தலைவர்

நியூயோர்க், ஏப்ரல் 1

ஐ. நா. விலுள்ள இலங்கையின் விசேஷப் பிரதிநிதி திரு. டி. பி. சுபசிங்க, இம்மாதத்திற்குப் பாதுகாப்பு சபையின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

## தமிழ்நாட்டுச் செய்திகள்

இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்த 41 பேர் கொண்ட பூட்டான் தூதுகோஷ்டி, தனது சுற்றுப்பிரயாணத்தை முடித்துக் கொண்டது. தொழில், விவசாயம் ஆகியவற்றில் பாரதநாடு அடைந்திருக்கும்முன்னேற்றத்தை அது வெகுவாகப் பாராட்டியது.

∴ ∴ ∴

டில்லியிலுள்ள பாகிஸ்தான் ஹைகமிஷனர் திரு. புரோஹி தனது பதவியிலிருந்து விலகி, கராச்சி சென்றார்.

∴ ∴ ∴

ஆந்திர முதல் மந்திரி திரு. சஞ்சீவையா பிரதமர் நேருவுடன் சம்பாஷணை நடத்தினர். ஆனால் விபரத்தை வெளியிட மறுத்துவிட்டார்,

∴ ∴ ∴

புதுடில்லி ஏப் 1

தூத்துக்குடிக்கும் கொழும்புக்குமிடையே மற்றொரு பிரயாணிகள், சரக்குகள் போக்குவரத்து கப்பல் சர்விசை ஆரம்பிக்க கிழக்கிந்திய கப்பல் போக்குவரத்துக் கார்ப்பரேஷன் திட்டமிட்டிருக்கிறது,

∴ ∴ ∴

மே 6-ந் தேதி பண்டித மோதிலால் நேருவின் 100-ம் ஆண்டுவிழாவுக்கு ஒன்றும், தாகூர் நூற்றுண்டுவிழாவுக்கு ஒன்றும், ஆகாசவாணி வெள்ளிவிழாவுக்காக ஒன்றும் ஆக 3 புதிய தபால் தலைகளை வெளியிட அரசாங்கம் முடிவு செய்துள்ளது.


தெய்வ வழிபாட்டிற்கும்

உங்கள் இல்லங்களில் நறுமணம் கமழ்வதற்கும்

33
303 ஊதுபத்திகளை
3003

உபயோகியுங்கள்.

யாழ்ப்பாணத்தில் ஸ்டாக்கிஸ்டுகள் தேவை.

தயாரிப்பவர்கள்:

எஸ். வி. முருகேசன் அன் சன்ஸ்,

பெங்களூர்—2.

சோல் ஏஜண்டுகள்:

ஜெகஜோதி அன் கோ.

குருநெனிய.



ரசிகர்களை மகிழ்விக்க

திரும்பவும் காட்சியளிக்கிறது

கிங்ஸ்லி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

இணைபிரியா இதயம் உள்ள சகோதரர்கள் நாங்கள். அதனால் அண்ணன் தங்கையாகிய நாங்கள் இந்த அவனிக்கே புதியவர்கள்.

ஏன் அகிலத்திற்கே புதுமையானவர்கள். நாங்கள் கண்ணியம், இலட்சியம், தன்னடக்கம், பண்பாடு போன்ற இன்னும் நல்ல வழிகளைக் கடைப்பிடித்தோம்.

........எனவே

பழகப்பழக பாலும் புளிக்கும், பருகப் பருக தேனும் திகட்டும். இனிக்கும் நிலவும் இதயத்தை மயக்கும். தென்றலும் கூட சில போது கசந்து விடுவதுஉண்டு........

ஆனால் மலை அசைந்தாலும் நிலை அசையாது, சுகம் நாடாது, சுதந்திரம் தேடாது வாழ்க்கையில் போராடினேன்......

ஏன்?

எல்லாம் என் தங்கையின் நல்வாழ்விற்காக. கடைசியில் கண்டதென்ன?

பிரமை தட்டும் புயல் வாழ்வில் சிக்கிய எங்கள் உள்ளமுருக்கும் வரலாற்றை வந்து பாருங்கள்......

புதுமை விரும்பிகள்

எம். ஜீ. ராமச்சந்திரன்
பி. வி. நரசிம்மபாரதி,
பி. எஸ். கோவிந்தன்
ஈ. வி. சரோஜா
மாதுரிதேவி, வி. சுசீலா

நடித்த



அசோகா பிக்சர்ஸ்

என் தங்கை

டைரக்ஷன்: CH. நாராயண மூர்த்தி & M.K.R. நம்பியார்

கதை, வசனம்: வில்லன்: T.S. நடராஜன் ஸ்டுடியோ: நியூடோன்

அசோகா பிக்சர்ஸ், 18, லஸ் அவன்யூ, மதருஸ்.4



இப்பொழுது திரையிடப்படுகிறது!

மனோகரா (யாழ்ப்பாணம்)

நீலமலைத் திருடன்

ரஞ்சன் அஞ்சலிதேவி நடித்தது.

மாலை 6-30 இரவு 9-30 சனி, ஞாயிறு 2-30 மெற்னி

## யாழ்ப்பாண பொது மக்களுக்கு

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

டத்துக்கு தன்னை அர்ப்பணிப்பேனென்றும் ஒவ்வொரு தொண்டரும் பிரதிக்ஞை செய்துகொள்ளவேண்டுமெனவும் இயக்கம் முடிவு செய்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டம் முழுவதிலும் உணவு நிலைமை சரிவர நடைபெறவும் பொதுமக்களுக்கு உதவி செய்யும்வகையிலும் ஒவ்வோர் ஊரிலும் சிறு சிறு வர்த்தக இயக்கங்களை நிறுவதென்றும் இவற்றிற்குத் தாய்ச் சமாசமாக யாழ்ப்பாணம் மாவட்ட வர்த்தகர்கள் ஐக்கிய சமாசத்தை ஸ்தாபிப்பதென்றும் மேற்படி இயக்கம் முடிவு செய்து நடவடிக்கையும் எடுத்துவருகிறது.

## 2000 சிறுபான்மைத் தமிழர் மறியல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பூராவும் சிறுபான்மைத் தமிழர் அறப்போர் முன்னணியைச் சேர்ந்த 2000 தொண்டர்கள் மறியலிற் கலந்து கொண்டனர்.

## ஆசிரியருக்குக் கடிதம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வழக்கறிஞர் ஏனோ அறியவில்லை. இதுதான் உத்தேச தேசியக் கல்வித் திட்டமா? இந்த நிலையில் சம அந்தஸ்து எங்கே இருக்கிறது? தமிழ் மக்களைத் தொடர்ந்து ஏமாற்ற முடியாது. ராஜதந்திரத்துக்கு இந்நாட்டில் பஞ்சமிருக்குமானால், இதர நாடுகளிலுள்ள ராஜதந்திரிகளையாவது வழிகாட்டும்படி கோரலாம்.

பி. இராஜரத்னம்

கோட்டடித் தெரு

கொழும்பு.

## தமிழ்ப்பகுதி நிலைமை

## இரு அமைச்சுகள் கூட்டறிக்கை

கொழும்பு ஞாயிறு

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், வவுனியா ஆகிய இடங்களின் நிலைமையில் பொதுவான மாற்றம் இல்லை என பாதுகாப்பு-கைத்தொழில் உள்நாட்டு அமைச்சு விடுத்துள்ள கூட்டறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. அறிக்கை மேலும் கூறுவதாவது:-

"அரசாங்க அதிபரின் வாசஸ்தலத்திலிருந்து சத்தியாக்கிரகிகள் மீது கற்கள் வீசப்பட்டதாய் ஒரு பத்திரிகை குற்றஞ்சாட்டியிருக்கிறது. இதன் விளைவால் எவரும் காயமடையவில்லை எனச் சத்தியாக்கிரகிகள் கூறுகிறார்கள்.

சத்தியாக்கிரகிகளுக்கருகில் குண்டு வெடித்ததாயும் இதனால் எவ்வித சேதமுமில்லை என்றும் கூறப்பட்டிருக்கிறது. இச்சம்பவம் பற்றிப் பொலிசார் விசாரணை நடத்தியிருக்கின்றனர். அரசாங்க அதிபரின் வாசஸ்தலத்தில் பட்டாசுகள் சுடப்பட்டன எனப் பொலிஸ் விசாரணையில் தெரிய வந்திருக்கிறது.

இராணுவம் 1 மாத காலமாக யாழ்ப்பாணத்தில் முகாமிட்டிருக்கின்றனர். இராணுவம் அங்கு போன சிறிது காலத்தில், பொது மக்கள் துன்புறுத்தப்பட்டதாக பொய் வதந்திகள் பரவின. ஆனால் எவராவது துன்புறுத்தப்பட்டதாகவோ, காயமடைந்ததாகவோ எப்போதாவது, எவராவது, புகார் கூறவில்லை. அரசாங்க அதிபரின் வாசஸ்தல ஊழியர்கள் குற்றவாளிகளாய் இருந்து விடுதலையானவர்கள் என்றும், கற்களும், குண்டுகளும் அவர்களால் வீசப்பட்டதாயும், காயம் அடையாமல் தப்பியதற்கு சத்தியாக்கிரகிகளின் பிரார்த்தனையே காரணம் என்றும் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் கூறுகிறார்கள். அவர்களின் உண்மையான புகார் சத்தியாக்கிரகிகளின் பிரார்த்தனையை இவ்விதச் செயல்களின் மூலம் குழப்புவதென்பதே.

மட்டக்களப்பு அரசாங்க அதிபரின் வாசஸ்தலத்தில் செயல்படும் தற்காலிகக் காரியாலயத்தில் அரசாங்க ஊழியர்கள் வேலை செய்கிறார்கள். இந்தக் காரியாலயத்திலுருந்து கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பங்கீட்டரிசி வழங்கப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணம் அதிபரின் வாசஸ்தலத்தில் உள்ள காரியாலயத்திலிருந்து கூட்டுறவுச் சங்கங்களுக்கும், அதிகாரம் பெற்றவர்களுக்கும் பங்கீட்டரிசி, மாவு முதலியன வழங்கத் தயார் என அதிபர் தெரிவித்துள்ள போதிலும், தமிழரசுக் கட்சித் தலைவர்களினால் இம் முயற்சி பலனளிக்கவில்லை. தமிழரசுக் கட்சித் தலைவர்கள் கூட்டுறவுச் சங்கங்களையும், உத்தரவு பெற்ற விநியோகஸ்தர்களையும் அவைகளைப் பெறுவதிலிருந்து தடுபபதற்காக, தங்கள் செல்வாக்கை உபயோகித்தும், பயமுறுத்தியும் காரியம் செய்கிறார்கள்.

எனவே அரசாங்க அதிபர் புதிய விநியோகஸ்தர்களை நியமித்தார். இதன் காரணமாக அரிசி விநியோகம் செய்ய முடிந்தது. இவ்விஷயம் தமிழரசுக் கட்சித் தலைவர்களுக்குத் தெரிய வந்ததும் அதிபரின் வாசஸ்தல வாயிலில் சத்தியாக்கிரகம் செய்தனர். அவர்களின் நடவடிக்கை காரணமாய் சுமார் 4 லட்சம் மக்களுக்குக் கடந்த 3 வாரங்களாகப் பங்கீட்டரிசி வழங்க முடியவில்லை.

சமஷ்டிக் கட்சியின் நடவடிக்கைக் குழு, சமீபத்தில் கூடிப் பங்கீட்டரிசி பெற வேண்டாமெனக் கேட்டுக் கொண்டதாய்த் தெரிகிறது. மாவட்டத்திலுள்ள பல்லாயிரக் கணக்கானோர் சம்பளம், கூஷயரோக அலவன்ஸ், போன்றவற்றைப் பெற முடியவில்லை.

தங்களுக்கு நீதிமுடை ஏற்பட்டிருப்பதாய் அவர்கள் தெரிவித்துள்ளனர். தமிழரசுக் கட்சித் தலைவர்கள் யாழ்ப்பாணத்தில் தங்கள் சொந்த முறையில், இஷ்டம்போல் செயலாற்றுகிறார்கள் என்பது தெரிகிறது. சகல அரசாங்க ஊழியர்களுக்கும் லீவு ரத்துச் செய்யப்பட்டதாய் விடுத்துள்ள உத்தரவு இப்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் இராணுவம், பொலிஸ் ஆகியவற்றின் லீவு ரத்து நிறுத்தப்படவில்லை."

## இராணுவத்தினர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மூது' இராணுவத்தினர்களால் தாக்கப்பட்டாராம். அவருக்கு நெற்றியில் பலத்த காயம் ஏற்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கள்ளியங்காட்டில் பொன்னர் தம்பு என்பவரும் இதே போன்று தாக்குதலுக்குள்ளானதால் இரண்டு பற்களை இழந்ததுடன் மேல் உதட்டில் பலத்த காயமும் ஏற்பட்டது. இவரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சின்னக்குட்டி தம்பையாவை கோப்பாய் புரக்டர் திரு. ஆர். வி. சுப்பிரமணியம் ஆஸ்பத்திரிக்கு கொண்டுவந்து அனுமதித்தார்.

நேற்று மாலை ஊர்காவற்றுறையில் சிதம்பரப்பிள்ளை நடராசா என்ற கார் சாரதி கடற்படையைச்சேர்ந்த ஒருவரால் தாக்கப்பட்டதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

# சத்தியாக்கிரக செய்திகள்

மன்னார்

திரு. எஸ். இராசேந்திரம் தலைமையில் வந்த சூரியகட்டைக் கிராமமக்கள் நீண்ட ஓர் ஊர்வலத்தை மேற்கொண்டு சத்தியாக்கிரகத்தல் கலந்து கொண்டனர்.

ஃ ஃ ஃ

பெரியகடை வட்டாரத்தைச் சேர்ந்த அறுநூற்றுக்கு மேற்பட்ட ஆண், பெண், பிள்ளைகள் யாவரும் திரு. எஸ். ஆர். எம். வேலுச்சாமியின் தலைமையில் குமாரன் தியேட்டரிலிருந்து மிகப் பெரிய ஊர்வலமாகப் புறப்பட்டுக் கச்சேரி வாயிலை அடைந்து மன்னார் எம். பி. திரு. வி. ஏ. அழகக்கோனிடம் பணமுடிப்பொன்றை வழங்கினர்.

ஃ ஃ ஃ

மன்னார் பட்டினசபையின் உதவி அக்கிராசனராகிய திரு. எஸ். வேதவனம் தலைமையில் ஓர் ஊர்வலம் எழுத்தூர், சாவல்கட்டு, பறங்கித்தெரு முதலாம் இடங்களிலுள்ள மக்களையுள்ளடக்கி ஊர்வலமாகப் புறப்பட்டுக் கச்சேரி முன்றலில் மன்னார் எம். பி. திரு. வி. ஏ. அழகக்கோனிடம் பணமுடிப்பொன்றையும் உணவுப் பொருள்களையும் கொடுத்தது.

ஃ ஃ ஃ

சலவைத் தொழிலாளர் மிகப் பெரிய ஊர்வலமாக திரு. எஸ். இராசையா தலைமையில் புறப்பட்டுப் பணமுடிப் பொன்றை வழங்கிச் சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்டனர்.

ஃ ஃ ஃ

பாலையடிப் புதுக்குளம், அடம்பன் முதலிய 17 வட்டாரங்களுக்குரிய நியமனப் பத்திரங்களைப் பெறவந்த உதவித் தேர்தலதிகாரி அவற்றைப் பெறமுடியாது திரும்பவேண்டியேற்பட்டது. மன்னார் எம். பி. திரு. வி. ஏ. அழகக்கோன் தலைமையில் 200க்கு மேற்பட்ட சத்தியாக்கிரகத் தொண்டர்கள் மேற்படி நியமனப் பத்திரம் பெறமுடியாதவாறு தடைப்படுத்தியதே இதற்குக் காரணம்.

## திருவண்ணை நகரில் திருக்கல்யாணம்

திருவண்ணை நகர் ஸ்ரீ வைத்தீச்வரஸ்வாமி கோவிலில் சென்ற சனிக்கிழமை, அம்பாள் தபசு, திருவுலா, கன்னி ஊஞ்சல், பின்னர் திருக்கல்யாணம், இரவில் புஷ்பப் பல்லக்கு இவை வெகு சிறப்பாக நடைபெற்றன. நேற்று சண்டேஸ்வரர் உற்சவம். இன்று இரவு வைரவர் பூஜை.

## 'தமிழுக்கு சட்டபூர்வமான அந்தஸ்து'

சென்ற சனிக்கிழமை "ஈழநாடு" பத்திரிகையில் 2ம் பக்கத்தில் வெளியான 'தமிழுக்கு சட்ட பூர்வமான அந்தஸ்து வேண்டும்' என்ற கட்டுரை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் உபதலைவர் திரு. ஏ. வி. நடராஜாவால் எழுதப் பெற்றதாகும். சில பிரதிகளில் இது தவறுக விடுபட்டுப் போயிற்று.

## கச்சேரிக்குள் சென்ற

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### காங்கேசன்துறை தொண்டர்கள்

நேற்று மாலை ஆறுமணியிலிருந்து இன்று மாலை ஆறு மணிவரை காங்கேசன்துறைத் தொண்டர்கள் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் சத்தியாக்கிரகம் செய்கிறார்கள்.

## ரயில்வேயிலும் மறியல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தது. அதன்பின்னர் மறியல் இயக்கத்தை ரயில்வே நிலையங்களுக்கும் கூடியவிரைவில் விஸ்தரிப்பது என்று முடிவு செய்தது.

## மழையிலும் மறியல்

### வவுனியாவில் 12வதுதினம்

வவுனியா, ஞாயிறு

வவுனியாவில் மறியல் இயக்கம் ஆரம்பமாகி இன்றுடன் பன்னிரண்டாவது தினம் முடிவடைகிறது.

வவுனியா எம். பி. திரு. டி. சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறும் இந்த மறியல் இயக்கத்தில் வவுனியாத் தொகுதியைச் சேர்ந்த பல்வேறு கிராமங்களிலிருந்து ஆண்களும் பெண்களும் சிறுவர்களும் சிறுமிகளும் கலந்து கொள்கின்றனர். சென்ற இரண்டு தினங்களாக இங்கு மழை பெய்த போதிலும் மக்கள் மழையையும் பொருட்படுத்தாமல் மறியல் செய்து வருகின்றனர். திரு. பி. கணபதிப்பிள்ளை, திரு. கே. விநாயகமூர்த்தி, திரு. எஸ். சுப்பிரமணியம் ஆகியோர் தலைமையில் வந்த ஊர்வலங்கள் திரு. சிவசிதம்பரத்திடம் பணமுடிப்பும் கொடுத்தன.

எப்பொழுதும் உபயோகியுங்கள்

டால்மியாஸ்

★ போட்லந்து சிமெந்து

★ ஸ்டோன்வெயர் குழாய்கள்

★ பயர் பிறிக்ஸ்

செட்டிநாட்

கார்ப்பரேஷன் (பிரைவேட்) லிமிட்டெட்

116, 118, கொய்சர் வீதி,

கொழும்பு.

இலங்கையில் புகழ்பெற்ற

R. P. S. கோப்பித்தூளையே

எப்பொழுதும் உபயோகியுங்கள்.

குணத்திலும் மணத்திலும் சிறந்தது

R. P. S. கோப்பித்தூள்.

எங்களிடம்

- கடுகு
- மிளகு
- கொச்சிக்காய்
- பலசரக்குச் சாமான்கள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

விபரங்களுக்கு:

ரஹ்மான் புரடியூஸ் ஸ்டோர்ஸ்

22, 26, பழயசோனகத் தெரு,

கொழும்பு-12.

டெலிபோன்: 6146

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.